செந்தமிழ்

தொகுதி: 92 செப்டம்பர் 1998 பகுதி: 9

திங்கள் இதழ்

முதன்மை ஆசிரியர் **மா. தனுக்கோடிபாண்டியன்** பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் செ. கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர்.

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் ச. மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பேரறிஞர் சி.கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் கு. துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.அ மணவாளன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பெரும்புலவர் இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேராசிரியர் ந. பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் ந. மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பேரறிஞர் எஸ்.எம். கமால்
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் ஈ.கே. இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பேராசிரியர் சே. அரிராமநாதன்
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

செந்தமிழ்

திங்கள் இதழ்

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	
வாணாள் கட்டணம்	ரூ. 500	ரூ. 1000
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

முதன்மை ஆசிரியர் *மா.தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ.,பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் 300
பேரறிஞர் நா. பாலுசாமி,
(மதிப்புறு பேராசிரியர், உயர் ஆய்வு மையம்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்)

2. சேனாவரையர் 303
பேரறிஞர் அ.மா. பரிமணம், தஞ்சாவூர்.

3. அழகியல் நோக்கில் புற நானூற்றுப் பாடல்கள் 308
பேரறிஞர். தெ. திருஞானமூர்த்தி, மேலைச்சிவபுரி

4. மக்கள் நல அரசு 314
நாபா, மதுரை

5. இனியர் - ஒரு மருத்துவர் 320
புலவர் மா. சின்னு, சேலம்.

6. கவிமணியின் மொழி பெயர்ப்புத்திறன் 324
பேரறிஞர் இரா. மோகன்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

7. சித்தியாகும் உத்திகள் 332
பேரறிஞர் கதிர். மகாதேவன்
(மதிப்புறு பேராசிரியர்,
உயர் ஆய்வு மையம், மதுரைத் தமிழ்ச் சங்கம்)

மாட்சிமை தங்கிய சேதுபதி மகாராணி

த. இந்திராதேவி பி.ஏ., அவர்களின்

திருவடிக்குக் கண்ணீர்

கருவிழியைக் காக்கின்ற இமைக ளைப்போல்
கனித்தமிழைக் காக்கின்ற சேது மன்னர்

திருமரபின் இராமநாதர் தேவி யாக
திருமகளே, நீசிறந்தாய்! தமிழ்ச்சங் கத்தின்

அருந்தலைமை நீஏற்றே பெருஞ்செல் வத்தை
அகமகிழ்ந்தே அளித்தாயே, இந்தி ராவே

வருந்துகிறோம் உன்மறைவால் மகாஇ ராணி
வார்க்கிறோம் திருவடிக்குக் கண்ணீர்ப் பூக்கள்!

க. செயமூர்த்தி

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா.பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சூத்திரம் 225

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்றல் ஆறே

(ப.ரை) எஞ்சிய கிளவி – முன்னிலை வினை தவிரந்த ஏனைய ஏழு வினைச் சொற்களும், தோன்றல் ஆறு – தோன்றும் வழி, இடத்தொடு சிவணி – தத்தம் இடத்தொடு பொருந்தி, ஐம்பாற்கும் உரிய – (இருதிணை) ஐந்து பால்களுக்கும் உரியவாம்.

முன்னிலை வினைச்சொல் ஒழிந்த ஏனைய ஏழு வினைச்சொற்களும் மூவிடங்களுள் தத்தம் இடத் தொடு பொருந்தி இருதிணையிலும் ஐந்து பால்களுக்கும் உரியனவாம்.

(வி.ரை) கிளவி – சொல், வினைச்சொல். இடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடம். இடத்தொடு பொருந்துதலாவது, ஏழு வினைச் சொற்களும் மூவிடத்திற்கும் வாரா என்பதாம்; அதனால் தத்தமக்குரிய இடம் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். சிவணி – பொருந்தி ஐம்பால் – உயர்திணை ஆண், பெண், பலர் பால்களும், அஃறிணை ஒன்றன் பால், பலவின் பால்களும். எஞ்சிய ஏழுனுள், வியங்கோள், செய்யும் என்னும் முற்றுச் சொற்களுக்குச் சிறப்பு விதிகள் பின்னர்க் கூறப்படுதலால், இவை தவிர்ந்த ஐந்துவினைச் சொற்கள் பற்றியதே இச்சூத்திரம் என உணர்தல் வேண்டும். அவை, வினையெச்சம், இன்மை செப்பல், வேறு என்னும் முற்று, செயம்மன என்னும் வாய்பாட்டு முற்று, செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் என்னும் ஐந்தும் ஆம்.

(எ.டு) உழுது வந்தேன், உழுது வந்தேம் – தன்மை (ஒருமை, பன்மை) உழுது வந்தாய், உழுது வந்தீர் – முன்னிலை (ஒருமை, பன்மை)

1) உழுதுவந்தான், உழுதுவந்தாள், உழுதுவந்தார் (உயர்திணை முப்பால்), உழுது வந்தது, உழுதுவந்தன – (அஃறிணை இருபால்) இவை வினை எச்சங்களால் முடிந்தன

2) யான் இல்லை, யாம் இல்லை – தன்மை (ஒருமை, பன்மை)
நீ இல்லை, நீர் இல்லை – முன்னிலை (ஒருமை, பன்மை)
அவன் இல்லை, அவர் இல்லை–படர்க்கை (ஒருமை, பன்மை)
அது இல்லை, அவை இல்லை–படர்க்கை (ஒருமை, பன்மை)

– இவை இன்மை செப்பல்

3) யான்வேறு, யாம்வேறு – தன்மை
நீவேறு, நீயிர்வேறு – முன்னிலை
அவன்வேறு, அவள்வேறு அவர்வேறு,
அதுவேறு, அவைவேறு – படர்க்கை

– இவை வேறு என்னும் முற்று

4) யான் உண்மன, யாம் உண்மன – தன்மை
நீ உண்மன, நீயிர் உண்மன – முன்னிலை
அவன் உண்மன, அவள் உண்மன, அவர் உண்மன
அது உண்மன, அவை உண்மன – படர்க்கை

– இவை செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டு வினைச்சொற்கள்

5) யான் உண்ணும் ஊண், யாம் உண்ணும் ஊண் (சோறு) – தன்மை
நீ உண்ணும் ஊண், நீயிர் உண்ணும் ஊண் – முன்னிலை
அவன் உண்ணும் ஊண், அவள் உண்ணும் ஊண், அவர் உண்ணும் ஊண்;
அது உண்ணும் ஊண், அவை உண்ணும் ஊண் – படர்க்கை

– இவை செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்

இவற்றுள் இன்மை செப்பல், வேறு என்னும் முற்றும் மூன்று காலங்களுக்கும் வரும்; செய்ம்மன – எதிர்காலம் பற்றியது; செய்யும் என்பது எதிர்காலம் பற்றிவரும்; சிறுபான்மை நிகழ்காலத்திற்கும் வரும். செய்த என்னும் எச்சம் இறந்தகாலம். வினையெச்சம் பற்றிப் பின்னர் விளக்கப்படும்.

சூத்திரம் 226:

(வியங்கோள்)

அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீரிடத் தொடும்
மன்னா தாகும் வியங்கோள் கிளவி

(ப.ரை.) அவற்றுள் – மேலே எஞ்சியவை எனக் கூறுப்பெற்ற ஏழனுள், வியங்கோள் கிளவி – வியங்கோள் வினைமுற்று, முன்னிலை தன்மை – முன்னிலை, தன்மை, அ ஈரிடத்தும் – ஆகிய இரண்டு இடங்களிலும், மன்னாதாகும் – நிலை பெறா.

வியங்கோள் வினைமுற்று தன்மையிலும் முன்னிலையிலும் பெரும்பாலும் வாரா; சிறுபான்மை வரும். நன்னூல் ஆசிரியர் வியங்கோள் மூவிடத்தும் வரும் என்பார்.

(வி.ரை.) அ–ஆ என நீண்டது, அல்லது ஆ என்பதற்கு ஆகிய எனப் பொருள் கொள்ளலாம். வியன்கோள் – வியங்கோள். இவ்வினைமுற்று வேண்டுகோள், வாழ்த்துதல் பொருள்களிலும் வைதல் பொருளிலும் வரும். வாழ்க – ஒழிக; முன்னது வாழ்த்து, பின்னது வைதல். மன்னுதல் – பொருந்துதல், நிலை பெறுதல். வியங்கோள் தன்மை முன்னிலைகளில் வாரா என அறுதியிட்டுக் கூறவில்லை. இச்சூத்திரம் மன்னுதல் என்பது பெரும்பாலும் எனப்பொருள்பட்டுச் சிறுபான்மை வியங்கோள் தன்மை முன்னிலைகளிலும் வரும் எனக் கொள்க. வியங்கோள் படர்க்கைச் சொல்லாகவே நிற்கும்.

(எ.டு) அவன் வாழ்க – படர்க்கை
நான் வாழ்க – தன்மை
நீ வாழ்க – முன்னிலை

இம்மூவிடத்தும் வாழ்க என்னும் வியங்கோள் படர்க்கைச் சொல்லே என அறிக.

குறிப்பு: வியங்கோள் வினைமுற்று இருதிணை, ஐம்பால், மூவிடத்திலும் வரும் என்பார் நன்னூலார்.

(தொடரும்)

சேனாவரையர்

– பேரறிஞர் **அ.மா.பரிமணம்**

தமிழில் அச்சிடப்பட்டு வெளி வரும் எந்தப் புத்தகத்தையும் இன்று நூல் என்னும் பெயரால் குறிப்பிடுகின்றனர். ஆனால் அச்சொல் பழங்காலத்தில் இலக்கண ஏடுகளையே பெரும்பாலும் குறிப்பிடும். நன்னூல் என்னும் பெயர், அதன் பாயிரத்தில் இடம்பெறும் நூல் எனும் பெயர், "ஆதியில் தமிழ் நூல் அகத்தியர்க்கு உணர்த்திய மாதொரு பாகன்" என்பதிலுள்ள நூல் எனும் பெயர் எல்லாம் இலக்கண நூலையே உணர்த்துகின்றன.

தமிழ் முதல் நூலாகிய தொல்காப்பியம், இயற்றமி.. இலக்கணமாக அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும். இலக்கணம் சுருக்கமும் செறிவும் உடையதாகச் செய்யப்படுவதால், அதனை நன்கு உணர்ந்து கொள்ள, உரைகள் தேவைப்படுகின்றன. மக்களின் பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வாழ்ந்து வரும் மொழிகளுக்கு, அவற்றின் பழமை புதுமைகளை உணர்த்தும் இலக்கணஉரை விளக்கங்கள் மிகவும் இன்றியமையாதனவாகும்.

உரைகள் தம் பெருமையினால், மூல நூலுக்குப் பெருமை சேர்ப்பதும் உண்டு. வடமொழியிலுள்ள வேத உபநிடதக் கருத்துக்களைச் சுருக்கிப் பாதராயணர் என்பவர், பிரம்ம சூத்திரம்% என்னும் நூலினை இயற்றினார். அதற்கு ஆதிசங்கரர், இராமானுசர், மாத்துவர் ஆகிய மூவரும், தனித்தனியே, தத்தம் சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் உரைகள் எழுதினர். ஆதி சங்கரரின் உரை வேதாந்தத்திற்கும், இராமானுசர் உரை விசிட்டாத்துவைத்திற்கும், மாத்துவர் உரை துவைதத்திற்கும் பிரமாண நூல்களாகிப் பிரம சூத்திரத்திற்கு மேலும் பெருமை சேர்த்தன.

அடியார்க்கு நல்லார் உரை இல்லாவிட்டால் சிலப்பதிகாரத்தின் கலை நுட்பங்களை அறிந்திருக்க இயலாது. நச்சினார்க்கினியர் உரை இல்லையேல், சீவசிந்தாமணியைச் சுவைப்பது எளிதாகாது. யாப்பருங்கல உரையால்தான், அதன் யாப்பியல் விளக்கங்களை அறிய முடிகிறது. இதனால்தான் தமிழ் மக்கள், நூலாசிலயரைப் போலவே, உரையாசிரியரையும் நன்கு மதித்துள்ளனர். தொல்காப்பியர் செய்ததனைத் தொல்காப்பியம் என்றது போல, உரையாசிரியர்கள் செய்த

உரைகளை அவர்கள் பெயரால் 'சேனாவரையம்' இளம்பூரணம் என்று கூறிப் போற்றுகின்றனர்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியுள்ள பலருள், சேனாவரையர் ஒருவராவார். எழுத்திலக்கணமும் பொருள் இலக்கணமும் தமக்கென விதிக்கப்பட்ட வரம்புகள் கொண்டன. ஆனால், சொல்லிலக்கணம், தமிழ்மொழியின் வழக்காற்றில் அமையும் பல நுட்பங்களைக் கொண்டதாதலின், அந்தச் சிறப்பின் காரணமாகப் பலர் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதலாயினர். அவர்களுள் ஒருவராகிய சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதியிருந்தாலும், தமக்கு முன்னும் பின்னும் எழுதிய உரையாசிரியர்களைவிடத் தம் உரைத் திறத்தால், மிகுந்த பெருமை பெற்று விளங்குகின்றார்.

'சேனாவரையர்' என்பது சேனை, அரையர் என்னும் இருசொற்களால் அமைந்த பெயராகும். பழந்தமிழ் மன்னர் தம் படைத்தலைவர்களுள் சிறந்தார்க்கு, இப்பெயரைப் பட்டமாக வழங்கிச் சிறப்பித்துள்ளனர். இதனை நன்னூல் மயிலைநாதர் உரையாலும் அறியலாம். இதனால், சேனாவரையர் எனப்படுபவர், அரசரால் சிறப்பிக்கப் பெற்றிருத்தல் கூடும். இக்காரணமின்றி, இயற் பெயராகவும் வழங்கப் பெற்றிருக்கலாம். 'சேனாவரையர்' எனும் பெயர்க் காரணம் எதுவாயினும் அது தமிழுக்குப் பெருமை சேர்ப்பதாகவே அமையும்.

சேர நாட்டு இளவரசர் சிலப்பதிகாரக் காப்பியத்தை, இயற்றியுள்ளபோது, சோழ நாட்டு அமைச்சர் திருத்தொண்டர் புரராணத்தை இயற்றியுள்ளபோது, பாண்டி நாட்டுப் படைத் தலைவர் உரையாசிரியராகத் திகழ்ந்தார் என்பதில் வியப்பதிற்கில்லை! சேனாவரையர் தொல்காப்பிய உரையாளர் ஆனார் என்பது பாராட்டத் தக்கதே. இயற்பெயராயினும் சிறப்புக்குரியவரேயாவார்.

சேனாவரையர் என்னும் பெயர் கல்வெட்டுக்களில் காணப்படுவதனை அறிந்த ஆய்வாளர் சிலர், அது கொண்டு, இவரது ஊரையும் காலத்தையும், ஒருவாறு தெளிவுபடுத்தியுள்ளனர். "ஆற்றூர்ச் சேனாவரையர்" என வரும் கல்வெட்டுத் தொடரில் அமைந்த ஆற்றூர் என்பது தென் பாண்டி நாட்டுக் கொற்கைப் பகுதியில் பொருநைக் கரையில் அமைந்த ஊர் ஆதலின், இவர் அப்பகுதியைச் சேர்ந்தவராகலாம் என்றும், அக்கல்வெட்டுக்கள் இரண்டாம் மாறவன்யன் காலத்தனவாதலின் இவர் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டினராகலாம் என்றும் கூறுகின்றனர். சேனாவரையர்

தம் உரையில், தென்பாண்டி நாட்டு மானோக்கம் பற்றிக் கூறுவதால் அவரது ஊரும், பவணந்தி முனிவர் நேமிநாதர் கருத்துக்கள் சிலவறை மறுத்துரைப்பதால் அவரது காலமும் பற்றிய கருத்துக்கள் உறுதிப்படுகின்றன.

தம் நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள கடவுள் வாழத்துப் பாடல்களாலும், உரையின் இடையே இடம்பெறும் எடுத்துக் காட்டுக்கள் சிலவற்றாலும் சேனாவரையர் சைவ சமயத்தவர் என்பதனை உய்த்துணரலாம்.

சேனாவரையர் தமிழ் இலக்கணத்தில் மட்டுமன்றி, வடமொழி இலக்கணத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்ததோடு அதன் கோட்டுபாடுகளில் பற்று மிக உடையவராகவும் இருந்துள்ளார். மாதவச் சிவஞான முனிவர் இவரது வடமொழிப் புலமையை வியந்து, "வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையர்" என்று போற்றுகின்றார். வடமொழி இலக்கணப் பற்றின் காரணமாக ஞாபகம், அனுவாதம், யோகவிபாகம், காரகம், என்றிங்ஙனம் வரும் வடமொழி இலக்கணக்குறியீட்டுச் சொற்கள் பலவற்றைத் தம் உரையில் பயன்படுத்தி விளக்கியுள்ளார்.

வடமொழியைத் தேவமொழி என மதிக்கும் இவர், அதனால் அது தமிழினும் உயர்ந்தது என்றும் நம்பினார். அதனால், மொழிக் கலப்புப் பற்றிக் கூறுங்கால், "தமிழ்ச்சொல் வட பாடைக்கண் செல்லாமையானும், வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும், இவை வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டன எனல் வேண்டும்" என்று கூறுகின்றார். மேலும் அதனால், தண்ணீரைக் குறிக்கும் நீர் என்னும் தமிழ்ச் சொல்லைக் கூட 'ஆரியச்சிதைவு' என்று குறிப்பிடுகின்றார்.

உயர் திணையின் வகைகளை விளக்கும் போது, தொல்காப்பியர் ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பல்லோர் அறியுஞ்சொல் எனக் கூறியுள்ளதனை விளக்கிய பின்னர், "அறிவு முதலாயினவற்றால் ஆண்மகன் சிறந்தமையின் ஆடூஉ அறிசொல் முற்கூறப்பட்டது" என்று கூறியுள்ளார். வேண்டாத இந்த விளக்கம், சமுதாயத்தில் பெண்களைப் பற்றி இவர் கொண்டிருந்த கருத்தினைக் காட்டி, கற்போரை முகம் சுளிக்கச் செய்து விடுகின்றது.

இவர் வடமொழிக் கோட்பாட்டைக் கொண்டிருந் தமையால், தமிழ் மரபின் அடிப்படையில் உரை வரைந்த இளம்பூரணர் கருத்துக்களைப் பலவிடங்களில் மறுத்துரைக் கின்றார். அவருடைய கருத்துக்களை மறுத்தபோதிலும்,

அவர்பால் மிக்க மதிப்புடையவராக இருப்பது பாராட்டத் தக்கது.

சேனாவரையர் கொண்ட கொள்கையால், உரையில் இடம்பெற்ற சில குறைபாடுகளை உணர்ந்து, அவற்றால் கலக்கமடையாமல் கற்றால், அவரது உரை மிகவும் சிறந்த உரையாதலை உணர்ந்து பயன்பெறலாம்.

இலக்கண உரையாளர்கள் இறப்பு நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலங்களிலும், தம் மொழியின் வரவு–செலவுகளை, செயற்பாடுகளை நன்கு உணர்ந்தவர்களாய் இருத்தல் வேண்டும். அவ்வகையில் அமைந்த சேனாவரையரின், புலமைத்திறத்தை அவரது உரையால் நன்கு உணரலாம். ஆண், பெண் ஆகியோரைக் குறிக்கத் தொல்காப்பியர் ஆடூஉ, மகடூஉ எனும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அச்சொற்கள் தம் காலத்தில் வழக்கிழந்ததனை உணர்ந்த இவர், "ஆண் மகனை ஆடூஉ என்றலும் பெண்டாட்டியை மகடூஉ என்றலும் பண்டையார் வழக்கு" என்று குறிப்பிடுகின்றார். பெண்மை அடுத்த மகன் என் கிழவி என்பதனை விளக்குமிடத்துப் "புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப" என்று கூறி, அச்சொல் தம் காலத்தில் வழங்கும் இடம் அறிந்து சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழில் திசைச்சொற்களாக, வட்டார வழக்குச்சொற்கள் வழங்குவதனைக் கண்டு, அதனை உணர்த்தும் வகையில், "தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பனவற்றைப் பெற்றம் என்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப" எனக் காட்டியுள்ளார்.

தமிழ்ச்சொற்கள் 'ச' எழுத்தில் தொடங்கமாட்டா என்னும் தொழ்காப்பிய விதிக்கு மாறாகச் சட்டி, சமழ்ப்பு முதலிய சொற்கள் வழங்கக்கண்ட இவர் அவற்றைப் பிற்கால வழக்கு என்று குறிப்பிடுகின்றார்.

காலப்போக்கில் தமிழில் புதிய சொற்கள் வருதல் கூடும் என்பதனைத் தொல்காப்பியர், கடிசொல் இல்லைக் காலத்துப் படினே எனக் காட்டியுள்ளார். அங்ஙனமாயின், பழைய சொற்கள் சில வழங்கப்படாமல் வீழ்ந்துபடவும் கூடும் என்றுணர்ந்த சேனாவரையர், அதற்குக் காட்டாக அழான், புழான் முதலியவற்றைக் காட்டியுள்ளார்.

இவர் நூற்பாக்களுக்கு உரை எழுதி, எடுத்துக் காட்டுத்

தரும் போது, அவை வெறும் எடுத்துக் காட்டுகளாக மட்டும் நின்றுவிடாமல், மக்களுக்குப் பயன்படும் செய்திகளை உணர்த்துவனவாகவும் அமையுமாறு காட்டுவதுண்டு. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறும்போது, காரணத்தை முற்கூறல் வேண்டும் என்பது விதி. அதற்கு எடுத்துக் காட்டாக, "கடுக்கலந்தகைபிழி எண்ணெய் பெற்றமையால் மயிர் நல்லவாயின்" என்பதனைக் கூறுகின்றார். இதில், கடுக்காய்த் தூளும் கையாந்தகரைச் சாறும் சேர்த்துக் காய்ச்சிய நல்லெண்ணெய், இளநரையைப் போக்கி வளம் நல்க வல்லது என்னும் செய்தியைக் காணலாம்.

இரட்டைக் கிளவி என்பதனை, "மக்கள் இரட்டை, விலங்கு இரட்டை போல வேற்றுமை உடையனவற்றையன்றி, இலை இரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவற்றை" என்று உவமை கூறி விளக்குவது சிறப்பாக உள்ளது.

'காலம் என்றது காலக்கடவுளை', 'உலகம் என்றது ஈண்டு மக்கள் தொகுதியை', பால் வரை தெய்வம் என்றது எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமான இருவினைப் பயனை வகுப்பது என்று இங்ஙனம் சொற்பொருள் விளக்கம் தந்து செல்வது தெளிவு மிக்கதாகும்.

சேனாவரையர், இலக்கண விளக்கம் செய்வதில் வல்லவராதலோடு, இலக்கியச் சுவையுணர் திறத்திலும் வல்லவராகவே இருந்துள்ளார். உரை மேற்கோளாகக் காட்டிய, ஒல்லேம் குவளை' என்னும் பாடலில், கணவன் அணிந்த குவளைக் கண்ணி புலால் நாறுதற்கும், புதல்வன் சூடிய எருக்கம்பூ நறுமணம் கமழ்தற்கும் கூறிய நுட்ப உரையும், அதன் நடையும் இவரது இலக்கியச் சுவையுணர்விற்குச் சான்று பகரும்; மேலும் இவர் சங்கப் பனுவலுக்கு உரை செய்யவில்லையே என்று எண்ணி ஏங்கவும் செய்யும்!

உரை வளமும் நடை நலமும் வாய்ந்த இவரது நூல் தமிழுக்கு அமைந்த சிறந்த உரைகக்ருவூலமாகும். செய்தி ஏடுகளெல்லாம் பிறமொழிக்கலப்பால் மொழிச் செல்வத்தை மாசுபடுத்தும் இந்நாளில், சேனாவரையம் போன்ற உரைகள் மாசகற்றும் நல்ல கருவிகளாகத் திகழ்கின்றன. அவற்றைப் போற்றிப் பயன் கொள்வது சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

(திருச்சி, வானொலி உரைத்தமுவல் – 21.6.98)

(முன்னிதழ்த் தொடர்ச்சி

அழகியல் நோக்கில் புறநானூற்றுப் பாடல்கள்

– பேரறிஞர். தெ. திருஞானமூர்த்தி

தாகம் மிக்கோர் மிகப் பெரும் பரப்பில் கடல்நீர் கிடந்தாலும் அதனைப் பருகார். ஆனால் மாவும் கலக்கிய சேற்று நீரேயாயினும் அதனை அருந்துவதற்குச் செல்லும் வழிகள் பலவாகும். எனவே, கடல்நீராக உள்ள பிறரிடம் செல்லாமல், சேற்றுநீராக உள்ள உன்னை நாடி வந்துள்ளேன் (204) என ஓரியைச் சிறப்பிக்கின்றார் கழைதின்யானையயார். இதில் உன்னிடம் நான் மட்டும் வருவதில்லை பலரும் வருகின்றனர் என்பதை உணர்த்த "அதர்பலவாகும்" என்றார். மேலும் இவ்வுலகில் கடல்நீராய் உள்ளவர்களுக்கு மத்தியில் குடிநீராய் இருந்து குடிபுரப்பவன் நீ என்ற சிறப்பு சிறப்பினுள்ளும் சிறப்பாகும்.

உவமையை விட பொருளைச் சிறந்ததாகக் காட்டும் நெறி கபிலர் நெறியாகும். மறைந்துவரும் ஞாயிறே மறையாது நிற்கும் எம்மாசனுக்கு எவ்வாறு நீ உவமையாவாய் (8) எனச் சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனை வாழ்த்துகினறார். உலகு புரப்பவன் பாரி ஒருவனே என்று உலகத்தார் புகழ்வர். ஆனால், இங்கு உலகு புரப்பதற்கு மாரியும் உண்டு (107) எனப் பாரியைச் சிறப்பிக்கின்றார். மாரியைப் போன்றவன் பாரி என்ர கூறாது, பாரியைப் போல் வள்ளன்மை மிக்கது மாரி எனும் கபிலரின் சொல்லாளுமைச் சிறப்புடையதாகும்.

எளிய உவமைகள், கையாளப்பெறும் நெறியால், நெஞ்சில் நீங்கா இடம்பெறுகின்றன. சோழன் நலங்கிள்ளி நன்மதி வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்த பசுமட் குரூஉத்திரள் போல (32) எண்ணியது முடிக்கும் ஆற்றல் மிக்கவன் என்கிறார் கோவூர்கிழார். பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியை எதிர்த்தோர் "செம்புற் றீயல் போல ஒரு பகல் வாழ்க்கைக் குலமரு வோரே" (51) என்கிறார் ஐயூர் முடவனார். புறப்புலவர்ள் உவமையைச் சிறப்போடும் ஆற்றலோடும்

கையாண்டு தம் பாடலுக்கு அழகும் வலிமையும் சேர்த்துள்ளனர்.

அவலத்தை எதிர்கொள்ளாத மனித வாழ்க்கையில்லை. ஏனெனில், அவலம் வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு கூறு; அனைவரையும் ஆற்றலொடு பாதிக்கும் ஓர் ஆழமான உணர்ச்சி அதனுள்ளும் ஆளுமை மிக்கவர் இளைஞர்கள். நெருக்கமான உறவினர்களின் இழப்புக்கள் நம் சிந்தையைச் சிதறடிக்கும் ஆற்றல் வாய்ந்தவை. இத்தளத்தில் பாடப்பெற்ற புறப்பாடல்கள் பல. எனவே, இன்றைய நம் வாழ்க்கைத் துன்பத்தை அவை வேறு பெயர்களில் பேசி நிற்கின்றன.

ஆளுமைமிக்க வல்வேற் சாத்தனின் இழப்பு தனி மனித இழப்பு அன்று; ஒரு நாட்டின் இழப்பு என்பதை அழகுபடச் சித்திரிக்கின்றார் குடவாயிற் கீரத்தனார். இளையோர் சூடார், வளையோர் கொய்யார், பாணன் சூடான், பாடினி அணியாள் என அவர் விவரித்துச் செல்கையில் ஏன்? ஏன்? என்ற தவிப்பு நம் நெஞ்சில் எழுகிறது. புலவர் அடுத்து வரும் அடிகளில் இவ்வினாவிற்கு நேரடியாகப் பதில் கூறவில்லை. இதற்கான பதிலை வாசகன் மனத்தில் எழுதிக் கொள்கிறான். பாடலில் இடம் பெறும் இவ்வெளி வாசகனைப் பாடலோடு ஒன்றவைத்துவிடுகிறது. மாறாக, ஆண்மை தோன்ற ஆடவர் கடந்த வல்வேற்சாத்தன் மாய்ந்த பின்னை முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே; என்கிறார்.

முல்லையும் பூத்தியோ என்ற தொடர் கவிஞரின் ஆழ்ந்த துன்பத்தை வெளிப்படுத்துகின்றது. கொழுநன் இருந்தாலே சிறப்புப் பெறுவதும் கற்பின் குறியீடாகத் திகழ்வதுமாகியது முல்லை. நாட்டின் தலைவன் இறந்து போனான் முல்லையே, உன்னால் எவ்வாறு பூக்க முடிந்தது எனத் துன்பமுறுகிறார் புலவர். பிற மலர்கள் பூத்தமை பற்றிய அக்கறை புலவருக்கில்லை. அவை பொருட்படுத்தப்படவும் வேண்டியதில்லை. ஆனால், கற்பின் குறியீடாகத் திகழும் முல்லையே நீ எவ்வாறு ஒல்லையூர் நாட்டில் பூத்தாய் என்கிற துக்கமே முல்லையும் பூத்தியோ என அவரைப் பேச வைத்தது. இத்தொடரில் 'உம்' என்ற அழுத்தமும்

'ஓ' என்ற வியப்பும் தரும் செய்தி இதுவேயாகும். வேறு எங்கேனும் பூக்காமல் ஒல்லையூர் நாட்டிலே பூத்தாயே என அவரின் துன்பம் இன்னும் அதிகமாகிறது. எனவே, முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே (242) என்ற தொடர் துக்கமும் வியப்பும் கலந்த வேறெங்கும் காணமுடியாத ஒப்பற்ற அவலத் தொடராகும். ஒரு மனிதனின் இழப்பு ஒரு நாட்டின் அவலமாய் மாறியதை முல்லைப் பூ வழி வெளிப்படுத்தியிருக்கும் கவிஞரின் திறம் பாராட்டத்தகும்.

ஈமத்தாழி செய்பவனே, எனக்கும் அதில் இடம் வேண்டும், எனவே கொஞ்சம் அகலமாகச் செய் என்கிறாள் தலைவனை இழந்த ஒரு தலைவி. வண்டிச் சக்கரத்திலே பொருந்திய பல்லியானது அதனோடு சுழன்று நெடுந்தொலைவு செல்வது போல வாழ்வின் பல இடர்ப்பாடுகளிலும் அவனோடு வாழ்ந்தவள் யான். அவனும் இறந்துபட்டான். எனவே,

"வியன்மல ரகன்பொழி லீமத் தாழி
அகலி தாக வனைமோ" (265)

என்கிறாள். இப்பாடல் அன்புடைக் கணவனை இழந்த ஒவ்வொரு பெண்ணின் உணர்வுமாக நின்று காலம் கடந்தும் வாழ்கிறது.

"அச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய
சிறுவெண் பல்லி போலத் தன்னொடு
சுரம்பல வந்த வெமக்கு மருளிய

என்ற உவமையே இப்பாடலின் உயிராய்த் திகழ்ந்து அவலத்தை மிகுவிக்கின்றது.

போரில் எழினியை இழந்த அரிசில்கிழார் கூற்றைத்தை அறனில் கூற்றம் எனத் தூற்றுகின்றார். அறம் மலிந்த செங்கோல் ஆட்சி செய்தவன் எழினி. மேலும், போர்க்களத்திலே பலரையும் வென்று நினக்குப் பலியிட்டவன். நீ அவனையே கொன்றாய் ஆதலின் அறனில் கூற்றம் எனத் தூற்றுகின்றார். எழினியை இழந்த நாட்டார் ஈன்றோர் நீத்த குழவி சேர்ந்தோரிடத்தெல்லாம் அழுவது போலத் துன்புறுகின்றனர்.

நின் இரக்கமற்ற செயல்.

"வாழ்தலின் வருஉம் வயல்வள னறியான்
வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்"கு (230)

நிலையை ஒக்கும் என்கிறார். முதலில் புலவராற் கையாளப் பெற்ற உவமை எழினியின் ஆளுமையையும், பின்வரும் உவமை அறனில் சுற்றத்தின் இழிநிலையையும் விளக்குவனவாக உள்ளன. அறநெறி, அருள் நெறி, வீரம், குடிநிலை ஆகிய இவற்றின் பின்புலத்தில் சுற்றத்தைச் சாடி எழினியின் இழப்பு அழியாச் சித்திரமாக்கப்பட்டிருக்கின்றது.

முல்லைப்பூவை முன்னிறுத்தி, புற நிகழ்வுகளால் அவலத்தை ஓவியமாக்கினார் குடவாயிற்கீரத்தனார். ஆனால், அரிசில்கிழாரோ சுற்றத்தை முன்னிறுத்தி வாழ்க்கையை நினைவுகூர்ந்து அவலச்சித்திரம் படைத்துள்ளார்.

உயர் அறங்களைப் பேசி காலத்தால் அழியாது நிற்கும் புறப்பாடல்களும் உண்டு. பல்யாகசாலை முதுகுமிப் பெருவழுதியின் போர் அறத்தை நெட்டிமையார் பின்வருமாறு கூறுகிறார்: ஆவும், ஆனியல்புடைய பார்ப்பனரும், பெண்டிரும், பினியுடையீரும், பொன்போற் புதல்வரைப் பெறாதோரும் என் அம்பு கடிதாகையால் பாதுகாவலான இடம் சென்று சேர்மின் (9) என்கிறான். மனித குலத்திற்குப் பயன் நல்குவனவற்றையும் பெண்டிர், பிணியுடையீர், புதல்வரைப் பெறாத இளையோர் தம்மையும் இழத்தல் மனித குலத்திற்குப் பெருங்கேடு என்பதை நெட்டிமையார் பாடல் ஊணர்த்தி நிற்கின்றது.

ஆலத்தூர் கிழார் பேசும் வாழ்வறம் (34) மனிதகுலத்தின் உயர்ந்த பண்பாட்டை எடுத்து விளக்கி நிற்கிறது.

"ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென

அறம்பா டிற்றே யாயிழை கணவ" (34)

என்ற உயர்அறமே இப்பாடலின் அடிப்பொருளாக அமைந்து பாடலைச் சிறக்கச் செய்துள்ளது. பாணர்க்கு எல்லாம் கொடுத்த எங்கோன் வாழ்க. அவ்வாறு கிள்ளிவளவனை யான் பாடேன் ஆயின் கதிரவனும் தோன்றான்: யானும் செய்ந்நன்றி கொன்றவன் ஆவேன் என்று அவனை வாழ்த்தித் தம் நன்றியுணர்வைப் புலப்படுத்துகின்றார்.

ஆன்முலை அறுத்தல், மங்கல மகளிர் கருச்சிதைத்தல், ஆசானைப் பழித்துக் கொடுமை செய்தல் முதலியன மாபாவம். இவற்றுக்குக் கழுவாய் இல்லை என்பர். ஒருகால் இவற்றுக்கெல்லாம் கழுவாய் உண்டு எனினும், செய்ந்நன்றி கொன்றோர்க்கு உயிதியில்லெனப் புலவர் பேசும் அறம் கலங்கரை விளக்காக நின்று மனிதகுலத்திற்கு வழிகாட்டும் சிறப்புக்குரியதாகும்.

கிள்ளி உழவனிடத்துக் குடியறம் பேசுகிறார் (35) வெள்ளைக்குடி நாகனார். தம் தமிழ்க் கிழவர் மூவருள்ளும் அரசு என்னும் சிறப்பும், நாடு என்னும் தகுதியும் உடையது நின்னதேயாகும். நின் வெண்கொற்றக் குடை வெயில் மறைப்பதற்கு உரியதன்று. குடிகளின் துன்பம் போக்குதற்கு உரியதாகும். நின் படை பலத்திற்கு அடிப்படை உழுபடையாகும். எனவே முறை வேண்டும் பொழுது அவர்க்கு எளிதிலே தோன்றி முறை செய்தல் மழைத்துளி வேண்டும் பொழுது பெருமழை பெய்தற்கு ஒப்பாகும். மேலும்,

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காலர்ப் பழிக்குமிக் ககண்ணகன் ஞாலம் (35)

என உலக நிலைகூறி, பகடுபுறந்தருநர் பாரம் ஓம்பிக் குடிபுறம் தருகுவை யாயின் அடங்காத நின் பகைவர்கள் எல்லாம் நின் அடிகளைப் பணிந்து அடங்குவர் எனக் குடியறம் பேசுகின்றார்.

ஒரு நாட்டின் உற்பத்தியோடு தலையாயதும்

அடிப்படையானதுமாகிய உழவுத் தொழிலோடும் இப்பாடல் தொடர்புபட்டிருப்பதானால், இது அழியாப் பாடலாகச் சிறந்து நிற்கிறது. கவிதை மிக முக்கியமான அடிப்படைச் சிக்கலோடும் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையோடும் தொடர்பு பட்டிருக்கவேண்டும் என்பதைக் கல்வெட்டாய் நின்றுணர்த்தும் புறக்கவிதையாய் இது திகழ்கிறது.

சமூக மதிப்புகளும் வாழ்க்கை மதிப்புகளும் சமூக உருவாக்கத்தில் பெரும்பங்கு வகுக்கின்றன. சமூகம் மற்றும் தனிமனிதன் சார்ந்த இவ்விழுமியங்கள் அடுத்த தலைமுறையினரின் வாழ்க்கைப் போக்கில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் வாய்ந்யவையாகும்.

போரில் தோற்பேன் ஆயின், 'புலவர் பாடாது

வரைகவென் னிலவரை (72) எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறுகின்றான். 'புலவர் புகழ்ந்த பொய்யாநல் இசை (228) புகழுள் சிறப்புடையது. மேலும்

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடிந்து" (27)

என்பதால் புலவர் பாடும் சிறப்பு இம்மையில் புகழையும் மறுமையில் இன்பத்தையும் அளிக்கவல்ல ஆற்றலுடையன வாகும். இவ்விரண்டையும் இழப்பதற்குத் துணியும் அவன்தன் வஞ்சினம் அவனது வாழ்வின் உயர்ந்த குறிக்கோளைப் புலப்படுத்துவதாய் உள்ளது.

(தொடரும்)

மக்கள் நல அரசு

- நாபா

(முன்இதழ்த் தொடர்ச்சி)

இனிமருந்து என்னும் அதிகாரத்தில் நோய் வாராமல் தடுத்தலும், வந்தபின் நீக்கலும் (Preventive and curative) ஆகிய இருவகையும் பற்றி விளக்குகிறார் வள்ளுவர். பசியை நீக்கும் முயற்சியில் ஈடுபடும் அரசு, மக்களுக்கு வரும் நோய் முதலியவற்றையும் நீக்கக் கடமைப்பட்டுள்ளது அதனால்தான் இந்த அதிகாரம் பொருட்பாலுள் அங்கவியலுள் வைக்கப்பட்டுள்ளது. மக்கள் நலஅரசு சமுதாயத்தில் பொதுச் சுகாதாரம் (Public Health) பற்றியும் கவனம் செலுத்தியாக வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முதுமொழி அன்றோ? மக்கள் பசி இன்றியும் நோய் இன்றியும் வாழ்வதற்கு வகைசெய்யும் அரசு வெளிப்பகை வாராமலும் மக்களைக் காத்தல் வேண்டும். 'செறுபகை' என்று வள்ளுவர் குறிப்பிடுவது புறப்பகையும் உட்பகையும் ஆகிய இருவகைப் பகையையுமே ஆம். திருக்குறளில் 'படைச்செருக்கு' 'படைமாட்சி' என்ற இரு அதிகாரங்களும் 'உட்பகை' என்ற அதிகாரமும் வைக்கப்பட்டதன் நோக்கம் அதுவேயாம். 'உட்பகை' பற்றிப் பொதுவாகப் பேசுமிடத்துப் பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு' என்று கூறியுள்ளார் திருவள்ளுவர். இதற்குப் பொருள் கண்ட பரிமேலழகர்,

"சங்கேத வயத்தான் மாறுபட்டுக் கூடும் பலகூட்டமும், உடனுறையா நின்றே பாழாகச் செய்யும் உட்பகையும், அளவு வந்தால் வேந்தனை (அரசை) அலைக்கும் கொல்வினைக் குறும்பரும் இல்லாததே நாடாவது"

என்று பொருள் கூறுவர். மேலும் விளக்க முற்பட்ட அவர்,

"சங்கேதமும் – சாதிபற்றியும் கடவுள் பற்றியும் பலர்க்கு உளதாம் ஒருமை, உட்பகை – ஆறலைப்பார், கள்வர், குறளை கூறுவார் முதலியமக்களும், பன்றி, புலி, கரடி, முதலிய விலங்குகளும்; – இம் மூன்றும் அரசனாலும் வாழ்வாராலும் கடியப்பட்டு நடப்பதே நாடு என்று கூறியுள்ளமை

மனங்கொள்ளத்தகும். நாட்டில் உட்பகை இன்றி அமைதியும் மகிழ்ச்சியும் நிலவுமாறு கண்காணிப்பது மக்கள் நல அரசின் கடமையாகும். இவ்வுட்பகை இன்றைய உலகில் தீவிரவாத இயக்கத்தின் வாயிலாகவும், வன்முறையும் புரட்சியாளர் வாயிலாகவும் பல்வேறு உருவெடுத்து மக்களையும் அரசாங்கத்தையும் அலைக்கழித்துவருவது கண்கூடு. இத்தகைய குழப்பங்களை அரசு இருப்புக்கரங்கொண்டு அடக்கி, முழு அமைதியை விரைந்து உருவாக்குதல் வேண்டும் என்பார்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்
பைங்கூழ்க்களை கட்டதனோடு நேர்"

என்று அறிவுறுத்துவது சிந்தனைக்குரியதாகும்.

புறப்பகையினும் உட்பகையே ஒருநாட்டின் அமைதியைப் பாதிக்கும். புறப்பகை வெளிப்படையாகத்தெரியும். எப்போது பகைவர் படைஎடுப்பர் என்பதும் ஓரளவு ஊகித்து அறிந்து கொள்ளமுடியும். ஆனால், உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப் போல் சமுதாயத்தின் அங்கமாயே காட்சியளித்து நினைத்த அளவில் – நினைத்த இடத்தில் இடையூறு விளைவிப்பது உட்பகை. வெளிப்பகையை வெல்வது எளிது; ஆயின் உட்பகை அத்துணை எளிதாக வெல்லப்படும் தன்மையது அன்று. எனவே அரசு உட்பகை களைவதில் மிக்க விழிப்புடனும் துணிவுடனும் செயல்பட வேண்டும். 'தூங்கற்க தூங்காது செய்யும் வினை' என்று பிறிதோரிடத்தில் திருவள்ளுவர் கூறியிருப்பது இங்குப் பெரிதும் கவனத் திற்குரியதாகும்.

"வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு"

என்னும் குறட்பா மேற்கூறிய கருத்துக்களை அரண்செய்து நிற்கும்.

இனி 'உட்பகை' என ஓர் அதிகாரமே திருக்குறளில் உள்ளது. உட்பகையாவது யாது என்பதனை விளக்க முற்பட்ட வள்ளுவர் பெருந்தகை,

"நிழல் நீரும் இன்னாத இன்னா தமர் நீரும் இன்னாவாம் இன்னா செயின்" என்று கூறியுள்ளமை

கவுனத்திற்குரியது. அஃதாவது, "உலகத்துப் பொதுவகையாக நிழலும் நீரும் இனிய எனினும், சில நச்சுமரமும் நச்சுப் பொய்கையும் என்பன உளவன்றே; மற்று அவை நிழலும் நீரும் போன்று இருந்தும், இருந்தோரும் அருந்தினோரும் இறந்துபடும் திறம் விளையும்; அதனால் மற்று ஆங்குத் தமராக நட்டோரது நீர்மை, நீர்மை போன்று இருந்து பெரிதும் இன்னாவாம், இன்னாதவற்றைச் செய்யுமிடத்து"

என்ற மேற் குறளுக்குக் காளிங்கர் கண்டுள்ள உரைவிளக்கம் தெளிவானதும் விளக்கமானதும் ஆகும். ஈண்டுக்கூறப்பட்டுள்ள நிழல் நீர் என்ற உவமைகள் இக்குறளின் பொருளைத் தெளிவுறுத்துகின்றன; சிந்தனையை வளர்க்கின்றன. நிழல் – இனிமைதருவது; நீர் – தண்ணியது, தாகம் தீர்க்கவல்லது. ஆனால் இவை இரண்டும் சில நேரங்களில் மக்களை மருட்டி மாறானா விளைவுகளை உண்டாக்கவும் வல்லவை. எனவே நச்சு (நஞ்சு) மரத்தையும் நச்சுப்பொய்கை (நீர்நிலை) யையும் உவமையாக ஆண்டுள்ளார் இவ்வுரையாசிரியர். எனவே ஆட்சியாளர் சமுதாயத்தில் நச்சமரங்களாகவும் நச்சுப்பொயகைகளாகவும் அமைந்து இனிமை செய்வார் போல் பாவனை செய்து, இறுதியில் அரசினையும் சமுதாயத்தினையும் அலைக்கழிக்கும் உட்பகைவரை ஒழித்தலில் சிறிதும் தயக்கம் காட்டல் கூடாது; துணிந்து செயலாற்றவேண்டும்.

இனிப் புறப்பகையாயினும் உட்பகையாயினும், அவற்றை முற்றக்குடியவேண்டும்; அரைகுறையாகப் பகைகடிதல் மேலும் இடர்ப்பாட்டிற்கு வித்திட்டதாகிவிடும். தீப்பற்றிக் கொண்டவீட்டைத் தண்ணீர் ஊற்றி அணைக்க முற்படுவோர், அத்தீமுழுமையும் அணையுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். அதுபோலவே பகையும் முற்றிலும் ஒழிக்கத்தக்க ஒன்றாம். அரசு ஒரு காரியம் செய்யமுற்படின் அக்காரியம் முடிவுறாமலே போய் விடும். இக்கருத்தமைந்த,

> "வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
> தீயெச்சம் போலத் தெறும்"

என்னும் திருக்குறட்பா நினைவு கூரத்தகும், இவ்வாறு நாடாள்வோர் மக்கள் நலம் காப்பாற்றபடல் வேண்டி, உட்பகை புறப்பகைகளை ஒழித்தல் வேண்டும். அப்போதுதான்

செய்யப்படும் நலத்திட்டங்கள் உரிய பயனை விளைவிக்கும். அமைதியில்லாத நாட்டில் எத்தகைய நலத் திட்டங்களையும் செயல்படுத்த இயலாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசு மக்களை மறந்துவிடுதல் தகாது. அவர்களைத் தழுவியே செயல்படல்வேண்டும். மக்கள் அஞ்சத்தக்கவகையில் சட்டதிட்டங்கள் அமைதல் கூடாது. மக்கள் அரசினாலோ பிறசக்திகளாலோ எவ்வித அச்சமும் கொள்ளாமல் உரிமை உணர்வுடன் வாழும் நிலை உருவாக்கப்படுதல் வேண்டும். திருக்குறளில் வெருவந்த செய்யாமை என்ற ஓர் அதிகாரம் அமைந்துள்ளது. அதில் இக்கருத்துக்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்".

என்னும் குறட்பா சிந்தனைக்குரியது; ஆட்சியாளர் நாளும் மனங்கொள்ளத்தக்கது.

"கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும் அரசனது பகை வெல்லுதற்கு ஏற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம்"

என்பது இக்குறளுக்குப் பரிமேலழகர் கண்ட உரை. காளிங்கர் இன்னும் விளக்கமாக,

"யாவர் மாட்டும் இன்சொல் வழக்கம் இன்றி வெஞ்சொல் விடுத்தலும், செய்யும் நீதியைக் கடந்து தண்டம் செய்தலும் இவை இரண்டும் மன்னவன் மாற்றாரைக் கொல்லும் வலியாகிய பொருள்வலி, படைவலி, துணைவலி, மற்று அரண்வலி, தன் வலி முதலிய அனைத்து வலியையும் பொடிபடத்தேய்த்துவிடும் அரம் என்றவாறு.

என்று பொருள் விரித்துள்ளார், ஆகவே ஆட்சியாளர் மக்களை அச்சுறுத்தியும், அளவுக்கு மீறிய அடக்குமுறையை மேற்கொண்டும் நிருவாகம் நடத்துவாராயின், அவ்வரசு நீடிப்பது அரிது. ஆகவே,

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்

அடிதழீகி நிற்கும் உலகு"

என்னும் குறட்பாவின்படி நடந்துகொள்ளல் நன்மைபயப்பதாகும்.

அரசு செய்யத் தகாதன:

மக்கள் நல அரசு என்ன செய்யவேண்டும், எவ்வாறு செய்யவேண்டும் என்று இதுகாறும் விரிவாகக் கூறப்பட்டது. இனி, அரசு தவிர்க்கவேண்டிய சில உள. அவை உறுதியாகத் தவிர்க்கப்படல் வேண்டும். அவையாவன

1. வரைவின் மகளிர்
2. கள்ளுண்டல்
3. சூதாடல்

அரசுக்குப் பொருள் வருவாய் ஒன்றே கருதி தீய செயல்களை மேற்கொண்டாவது பொருள் தேடல் வேண்டும் என்று இன்று பல அரசுகள் முயல்கின்றன; செயல்படுகின்றன. மக்களுக்கு ஓர் அரசு எத்தனை நன்மைகள் செய்தாலும் அவை யாவும் மேலே காட்டிய மூன்று தீமைகளை மேற்கொள்ளுங்கால் பயனற்றுப்போம். அரசியல் அறிஞர் கௌடில்யர் தமது பொருள் நூலுள் இம்மூன்றும் அரசுக்கு வருவாய் தேடும் வழிகள் என்று வற்புறுத்திக் கூறியுள்ளார். ஆனால் திருவள்ளுவரோ, அவற்றால் எத்துணைப் பொருள் வருவதாயினும் அவற்றைத் தீண்டற்க என்று கடுமையாக எச்சரிக்கிறார்.

"அன்பொடும் அருளொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்"

என்பது அவரது வாய்மொழி. திருவள்ளுவர் மேற்கூறிய மூவகைச் சமுதாயத் தீமைகளையும் அரசு எவ்வகையிலும் மேற்கொள்ளல் கூடாது என்பாராய், வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது என்ற அதிகாரங்களில் தம் கருத்துக்களை விரிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆட்சியாளர்க்கு வினைத்தூய்மை (Good deeds) வேண்டும் என்று வற்புறுத்தும் திருவள்ளுவர், இம்முக்குற்றங்களையும் அரசு கடிந்து ஒதுக்கவேண்டும் என்று கூறுவதில் வியப்பில்லை. பண்டைக் காலத்தில் சில நாடுகளில் பொதுமகளிரை (விலைமகளிர்) வைத்து வருவாய் தேடியதுண்டு. ஆனால்

திருவள்ளுவரோ அதனை முற்றக்கடிந்துள்ளார். அடுத்தது சூது. சூதாட்ட அமைப்புக்களுக்கு அரசே உரிமம் (Licence) வழங்குகிறது; சூதாட்டத்தை வளர்க்கிறது. அது காரணமாக அரசுக்கு வருவாய் கிடைக்கிறது. பொருள் வைத்துச் சூதாடலும் (சீட்டாட்டம்) குதிரைப்பந்தயம் நடத்துதலும் பரிசுச்சீட்டுகள் நடத்த உரிமம் வழங்குவதும் அரசே பரிசுச்சீட்டுக்களை அச்சிட்டு விற்பனை செய்வதும் ஆகிய இவை போன்றவை அனைத்தும் சூதின் பாற்படும். எளிய மக்களின் ஆசையைத்தூண்டி, ஒன்று பெற்றால் நூறு இழக்கும் படியான சூதாட்டத்தில் மக்களை மயங்கவைத்து அவர்கள் வாழ்வைப் பாழாக்கும் செயல் மக்கள் நல அரசு செய்யத்தக்கது அன்று. உழைப்பின்றிப் பொருளீட்டலாம் என்ற தவறான எண்ணத்தையும், அவ்வெண்ணம் ஈடேறாமல் போனால் அதனால் உண்டாகும் மன ஏக்கத்தையும் தரும் சூது அறிஞரால் விலக்கப்பட்டவொன்றாகும்.

இறுதியாகக் கள்ளுண்டல், கள்ளுக்கடைகளையும் பிற மதுவகைக் கடைகளையும் அனுமதித்து அதன் வாயிலாகப் பெரும் பொருளை அரசு தேடும் காலம் இது. இது எல்லாத் தீமைகளிலும் கொடியது. மது மதியை மயக்கும். அறிவைக்கலக்கும். தெளிவற்றநிலையை உருவாக்கும். குடித்து விட்டு விலங்குகளைப் போல மக்கள் வீதிகளில் புரளும் காட்சி அவலத்திற்குரியது. இதனை ஓர் அரசு செய்யுமாயின் மக்கள் எவ்வாறு ஈடேறுவது?

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்னொருவன்
சான்றோர் முகத்துக் களி"

என்பர் திருவள்ளுவர். வேறு எக்குற்றத்தையும் பொறுத்துக் கொள்ளும் தாய் கள்ளுணுண்டலை மட்டும் சிறிதும் பொறாள். எனவே மக்கள் நல அரசு இங்குக் கூறிய இம்மூவகைத் தீய செயல்களையும் பொருள் வருவாய் நோக்கி மேற்கொள்ளல் கூடாது என்பது திருவள்ளுவர் கருத்து.

(முற்றும்)

இனியர் – ஒரு மருத்துவர்

– புலவர் மா. சின்னு

செந்தமிழில் உள்ள பழைய நூல்களுக்கு உரை எழுதவேண்டு மென்றால் உரையாசிரியர் இலக்கிய இலக்கணப்புலமை மட்டும் பெற்றிருந்தால் போதாது. கணித நூற்புலமை வான நூற்புலமை சோதிட நூற்புலமை முதலிய பல்துறைப் புலமையும் பெற்றிருக்க வேண்டும். சுருங்கக்கூறின் நூலாசிரியர் பெற்ற திறன்கள் அனைத்தும் பெற்றவர்கள் எழுதும் உரையே சிறக்கும்; நிலைத்து நிற்கும்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களுக்கு உரை கண்ட சான்றோர்களில் தலைமையான இடம் பெற்றவர் நச்சினார்க்கினியர். இவர் தொல்காப்பியத்திற்கும் உரை எழுதினார், பத்துப்பாட்டுக்கும் கலித்தொகைக்கும் குறுந்தொகையில் இருபது பாடல்களுக்கும் உரைகண்டதுடன் சீவகசிந்தாமணியாகிய காப்பியத்திற்கும் உரை கண்டார். இவற்றுள் இவருடைய குறுந்தொகை உரை கிடைக்கவில்லை. சீவக சிந்தாமணிக்கு இவர் கூறும் உரையில் மருத்துவப் புலமை, வைரமகுடத்தில் பதித்த மணியாக ஒளிரக் காணலாம்.

திருத்தக்கதேவர்,

விளைக்கையால் கடைசியர் மட்டு வாக்கலின்
திளைத்தவர் பருகிய தேறல் தேங்குழிக்
குளிப்பவுண்டு இளஅனம் கன்னி நாரையைத்
திளைத்தலின் பெடைமயில் தெருட்டும் செம்மற்றே(50)

என்கிறார்.

உழவர்குலப் பெண்கள் தம்கையாலே மதுவை வார்த்தனர், அம்மதுவினை மள்ளர்கள் இடைவிடாது பருகியபோது சிந்திய மது நிலத்தில் தேங்கிக்கிடக்க, அப்போது அங்கு வந்த காம இன்பம் அறிந்த அன்னப்பறவை அம்மதுவினை உண்டு மயங்கி, காம இன்பம் நுகர்ந்தறியாத நாரையைப் புணர்தலின், அதனைக் கண்டு ஒரு பெண்மயில் தன் ஆண் மயிலைப் பார்த்து, 'நீ கள்ளுண்டு இதுபோல் மயங்காதே' என்று தெருட்டிற்று என்கிறார் ஆசிரியர்.

இச் செய்யுளின் விளக்கவுரையில், இனியர், பெடையென்றும் மயில் என்றும் பிரிக்க, என்றெழுதி, இனி மயிலைக் கண்டால் கள்ளின் களிப்புத் தீரும் என்றலின் அப்பெடைமயில் தெருட்டிற்று என்றுமாம் என்று எழுதினார்.

இதனால் கள்ளுண்டவரின் போதையைப் போக்கும் மருந்து, ஆண்மயிலின் அழகிய தோகைக்காட்சி என்றறிகிறோம். இனியரின் விளக்கம் அவருடைய மருத்துவப்புலமையை வெளிப்படுத்துகிறது.

ஏமாங்கத நாட்டில் உள்ள ஊர்களையும் அவ்வூர்களில் உள்ள அன்னச்சாலைகளையும் வீடுகளையும் காட்டுகிறார் தேவர்.

விலக்கில் சாலை யாவர்க்கும் வெப்பின் முப்பழச்சுனைத்,
தலைத்தணீர் மலரணிந்து சந்தனம் செய் பந்தரும்,
கொலைத்தலைய வேற்கணார் கூத்தும் அன்றி ஐம்பொறி,
நிலத்லைய துப்பெலா நிறைது ளும்பும் ஊர்களே (75)

'இந்நாட்டிலுள்ள ஊர்கள்தோறும் யாவர்க்கும் விலக்குதல் இல்லாத அடிசில் சாலைகள் (அன்னச்சத்திரங்கள்) உள்ளன. வெம்மையில்லாத சுனையில் காலையில் எடுத்த தண்ணீரில் பூவுமிட்டுச் சந்தனமும் இட்ட தண்ணீர்ப் பந்தர்கள் உள்ளன. வேல்போன்ற விழிபெற்ற மாதர் கூத்தாடும் இடங்கள் உள்ளன. மேலும், ஆங்கே ஐம்பொறிகளால் நுகரும் பொருள்கள் எல்லாம் நிறைந்து ததும்பும்' என்கிறார்.

இச்செய்யுளில் வந்துள்ள 'முப்பழம்' என்பதற்குச் சாதாரண உரையாசிரியர்கள் உரை கூறின், முப்பழம் – மா–பலா–வாழைக்கனிகள் என்று எழுதிவிடுவர். "காய்மாண்ட தெங்கின் பழம் வீழ"... (சிந்:31) எனத் தொடங்கும் நாட்டுவளப்பாடலில் இம்முக்கனிகளைத் தேவர் குறிப்பிட்டதை நினைவிற் கொள்ளாது எழுதி விடுவர்.

உரைத்திறனில் உயர்ந்து நிற்கும் இனியர், முன்பு முக்கனிகள் கூறப்பட்டதை நினைவிற்கொண்டு, ஈண்டு (சிந்75) முப்பழம் – கடு, நெல்லி, தான்றி என்பவற்றின் பழங்கள் என்று

சிறப்பாக எழுதினார். பண்டைத்தமிழர் நாவிற்கு நலந்தரும் மா–பலா–வாழைக் கனிகள் தரும் மரங்களை மட்டும் வளர்க்கவில்லை. உடலுக்கு நலந்தரும் – பிணிகளைப் போக்கும் மருந்து மரங்களையும் வளர்த்தனர் என்பதை உளங்கொண்டு கடு, நெல்லி, தான்றி என்று முப்பழத்திற்கு விளக்கந்தந்தார்.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் மூன்றையும் காயவைத்துப் பொடி செய்து 'திரிபலா' என்ற பெயரில் நாட்டு மருந்துக்கடைகளில் இன்று விற்கப்படுவதைக் காணலாம். இத்திரிபலா சூரத்தை நாள்தோறும் இரவில் உண்டால் குருதி தூய்மைபெறும், நரம்புகள் வலிமைபெறும்; கண்நோய்வாராது, தெளிவான பார்வை உண்டு, சருக்கரை நோய்வாராது. இம் மருத்துவப் பயன்களை யெல்லாம் அறிந்தவர் நச்சினார்கினியர். அதனால்தான் 'நோய் அறுத்தற்குக் கடு, நெல்லி, தான்றி சூழ வளர்ப்பார்கள்' என்றெழுதினர்.

ஆக்கந்தானே காரண முதற்றே
தொல். சொல்:21

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் 'கடுவும் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல வாயின' என எடுத்துக்காட்டுத் தந்தார். இனியர் தாம் ஒரு மருத்துவ நூற்பயிற்சியில் தேர்ந்தவர் என்பது தோன்ற பின்வருமாறு தெளிவுடன் எழுதினார்:

கடுக் கலந்த கைபிழி எண்ணெயைப் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின

கடுக்காய் கலந்து ஊறிய அல்லது காய்ச்சிய நல்லெண்ணெய் தேய்த்துக்குளித்தால் மயிர் நல்லவாக இருக்கும் என்கிற மருத்துவக் குறிப்பு இங்கே காணப்படுவதையும் ஒப்புநோக்க வேண்டும்.

ஏமாங்கத நாட்டு அரசி விசையை ஓர் எழிலரசி. "வான்சுவை அமிர்தம் அன்னாள்" என்பான் அரசன் சச்சந்தன், அவருடைய சிறு நுதலும் முகமும், இளம்பிறையும் குளிர் முழுமதியும் கூடினபோல் இருக்குமாம். தொழுதாற்கு

வரங்கொடுக்கும் தொண்டையாங்கனிவாயும் தூமுறுவலும் அழகொழுகும் மூக்கும் பெற்ற விசையின் வடிவப்பொலிவு கண்டால் உருப்பசியும் (ஊர்வசியும்) இவளை அடைய யான் ஆண்மகனாகப் பிறக்க வில்லையே என்று நினைந்து நினைந்து உருகுவாளாம். அழகெல்லாம் ஒருங்கே திரண்ட விசையை மேல் கொண்ட காதலால் (காதல் – எல்லாப் பொருளையும் நுகர்தற்குச் செல்லும் வேட்கை (இனியர்) அரசன் அந்தப்புரத்திலேயே அவளை முயக்கித் திளைத்தலைக் கூறும் தேவர்,

காதலால் காமபூமிக் கதிரொளி யவரும் ஒத்தார்
மாதரும் களிறனானும் மாசுண மகிழ்ச்சி மன்றல்
ஆதரம் பெருகுகின்ற அன்பினால் அன்னம் ஒத்தும்
தீதிலார் திளைப்பின் ஆமான் செல்வமே பெரிது மொத்தார்.

'மாதரும் (விசையை) களிறனானும் (சச்சந்தன்) மகிழ்ச்சியை உடைய முயக்கத்தால் மாசுணத்தை யொத்தும், அன்பினால் உளதாகிய மென்மையால் அன்னத்தை யொத்தும், கண்முதலிய அவயவ நுகர்ச்சியால் ஆமானை (காட்டுப் பசு) ஒத்தும், தீதில்லாதவர்கள் இப்புணர்ச்சிக்கு முன்னர்ப் போகபூமியில் உள்ளார் செல்வமே பெரிதும் ஒத்தார்' என உரை கூறிய இனியர், "தீதிலாத்திளைப்பிற்" பாடமாயின் ஆமானை ஒத்தும் தீதிலாமாதரும் களிறனானும் என்க; ஆமான் நக்குங்கால் பிறக்கும் இனிமையே ஈண்டு உவமம் என்றார்.

ஆமான் நக்குதல் முதலில் இனிமைதந்து பிறகு உயிரைநீக்கும் என்கிற மருத்துவ அறிவைப் பெற்றவர்களே இங்ஙனம் உரையெழுத இயலும். ஆமான் பிறஉயிர்களை நக்கி முதலில் சுகந்தந்து இறுதியில் உயிரைப் பேர்க்குவதற்குக் காரணமாக இருப்பது போல், விசையை சச்சந்தனுக்கு இப்பொழுது இனிய சுகந்தருகிறாள். இறுதியில் இக்காதலே சச்சந்தன் மாள்வதற்குக் காரணமாகப் போகிறது என்பதைக் குறிப்பால் உவமைமூலம் உணர்த்துகிறார் தேவர் என்பதை நாம் அறிந்து கொள்ள இனியரின் மருத்துவப் புலமையுரை உதவுகிறது.

(தொடரும்)

புலவர் மா. சின்னு

கவிமணியின் மொழிபெயர்ப்புத்திறன்

– பேரறிஞர் இரா. மோகன்

"கருணை மிகுந்த கவிமணி"

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதைக்குத் தனிச்சிறப்பையும் புதிய பொருளையும் தேடித்தந்த பெருங்கவிஞர் பாரதியார். அவருக்குப் பின் தோன்றிய தமிழ்க் கவிஞருள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

இனிமையும் எளிமையும் தாயுள்ளமும் ஆழ்ந்த கவனிப்பும் கருணையும் இரக்கமும் கவிமணியின் கவிதைகளில் காணப்படும் மிக முக்கியமான பண்புகள். அமைதியுடனும் இரக்க சிந்தையுடனும்தான் எதையும் அவர் நோக்குவார். "ஏழை என்று ஒருவன் – உலகில் இருக்கலாகாது ஐயா!; பாடு படுவர்க்கே – இந்தப் பாரிடம் சொந்தம் ஐயா!" மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா! என்றாற் போல் அப்பா, அம்மா, ஐயா போன்ற மென்மையான சொற்கள்தாம் அவருடைய நடையில் பயின்று வரும். இதனாலேயே கருணை மிகுந்த கவிமணி" எனச் சிறப்பிக்கப்பெற்றார் அவர்.

மொழிபெயர்ப்பு முக்கியமானது

கவிமணியின் படைப்புக்கள் "மலரும் மாலையும், ஆசியஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்யம்", உமார்கய்யாம் கீர்த்தனங்கள், "கவிமணியின் உரைமணிகள்", காந்தளூர்ச்சாலை என்னும் ஏழு நூல்களாக வெளிவந்துள்ளன. அங்கத இலக்கியம், குழந்தைப் பாடல்கள், கீர்த்தனைகள் என்னும் இசைப் பாடல்கள், கல்வெட்டு ஆராய்ச்சி எனப் பல்வேறு துறைகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தாலும், கவிமணிக்கு நிலைத்த புகழைத் தந்திருப்பவை அவரது மொழிபொயர்ப்பு நூல்களே ஆகும்.

மேலும், கவிமணி, பாரதி, பாரதிதாசனைப் போல் ஆவேசக் கவிஞர் அல்லர்; மேலைநாட்டுக் கவிஞர் கிரேயைப் போல் அவர் ஓர் அழகுக் கவிஞர். எழுதியதையே திருத்தியும்

செப்பனிட்டும் கவிதைக்கு அழகு சேர்ப்பது அவர் வழக்கம். எனவே, மொழிபெயர்ப்பதற்கும் பிற மொழிப் பாடல்களைத் தழுவிப் பாட்டிசைப்பதற்கும் மிகுந்த தகுதி படைத்தவராக அவர் விளங்கினார். "கவிஞர் என்ற வகையில், இவரால் இக்காலத் தமிழுக்குக் கிடைத்த வளம் மிகுதி என்று சொல்ல முடியாது. சில தனிப்பாடல்கள் (அவற்றில் பெரும்பாலன தழுவல்கள்), தனிமனிதர்களையோ நிறுவனங்களையோ வாழ்த்தியும் சரம கவியாகவும் பாடிய சில வெண்பாக்கள், ஆசிய ஜோதியில் சில பகுதிகள், உமார்கய்யாம் தமிழாக்கம் – இவை தமிழுக்கு இவர் வழங்கிய செல்வங்கள். இவை தவிர, தமிழில் குழந்தைப் பாடல் இலக்கியப் பகுதியை அருமையாகத் தொடங்கி வைத்த பெருமையும் இவருக்கே உரியது" எனப் புதிய தமிழ்க் கவிதை வரலாற்றில் கவிமணி பெறும் இடம் குறித்து மதிப்பீடு செய்கின்றார் பேராசிரியர் சாலை இளந்திரையன்.

கவிமணி, மொழிபெயர்ப்புப் பணியில் முனைப்புடன் ஈடுபட்டதற்குப் பிறிதொரு காரணமும் இருந்தது. அவர் 1951-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் திருச்சி வானொலி நிலையத்தார்க்கு ஒரு பேட்டி அளித்தார். அதில் "தமிழ் வளர்ச்சிக்குத் தாங்கள் கூறக்கூடிய யோசனைகள்? என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலாக," "மொழிபெயர்ப்பு முக்கியமானது. அனேக நூல்களை வேறு பாஷைகளிலிருந்து மொழிபெயர்க்க வேண்டும்" என்ற கருத்தினை முன்வைத்தார் கவிமணி. தமிழ் வளர்ச்சிக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற இந்த யோசனையை நடைமுறைப்படுத்தவும் அவர் தவறவில்லை; தயங்கவில்லை; ஒல்லும் வகையெல்லாம் மொழிபெயர்ப்புப் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார் அவர்.

"ஆசிய ஜோதி" – மூலத்தை வெல்லும் மொழிபெயர்ப்பு

பாரதியின் சொற்களிலே சொல்ல வேண்டும் என்றால், "பாரதநாடு பழம்பெரும் நாடு; பூரண ஞானம் பொலிந்த நன்னாடு: புத்தர் பிரான் அருல் பொங்கிய நாடு" ஆங்கில மொழியில் எட்வின் ஆர்னால்டு என்பவர் `Light of Asia' என்னும் பெயரில் அருள் பொங்கும் புத்தர் பெருமானுடைய வரலாற்றை

அழகிய கவிதை வடிவில் வெளியிட்டுள்ளார். அந்த நூலைத் தழுவித் தமிழ் மணம் கமழக் கவிமணி பழகுதமிழில் பாடியுள்ளார். `Light of Asia' என்ற ஆங்கிலத் தலைப்பைக் கவிமணி தமிழாக்கித் தந்திருக்கும் முறையே – தமதாக்கிக் கொண்டிருக்கும் பாங்கே – மிகவும் போற்றத் தகுந்ததாகும். ''ஆசியாவின் ஒளி' என்றோ 'விளக்கு'' என்றோ, ஒளி விளக்கு என்றோ பெயர்க்காமல், ஆசிய ஜோதி எனப் பெயர் சூட்டியிருப்பது மிகவும் எடுப்பாக அமைந்த ஒன்றாகும். ஒன்பது பகுதிகளால் உருவான இந்நூலில் இடம்பெற்றுள்ள புத்தரும் ஏழைச் சிறுவனும் கருணைக் கடல், புத்தரும் மகனை இழந்த தாயும் என்னும் பகுதிகள் கவிமணியின் மொழிபெயர்ப்புத் திறனுக்குக் கட்டியம் கூறுவனவாகும்.

ஒரு கவிஞரின் கவிதையை இன்னொரு கவிஞரால்தான் சரியாகவும் முழுமையாகவும் மதிப்பிட முடியும் என்பர். இவ்வகையில் நாமக்கல் கவிஞர், கவிமணியின் ஆசிய ஜோதியைப் பற்றிப் பாடும்போது,

தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதுதான் செவிப்பெருமை
ஆசிய ஜோதியெனும் புத்தர்போதம்
அழகுதமிழில் சொன்னான் அதுபோதும்

என்று குறிப்பிட்டுள்ளார்.

பதச்சோறாக, ஆசிய ஜோதியிலிருந்து கவிமணியின் மொழிபெயர்ப்புத் திறன் பளிச்சிடும் ஓர் இடத்தைக் காண்போம். உண்மையை உணர்வதற்காக அரச வாழ்வைத் துறந்து – மனைவியையும் மகனையும் மறந்து – நள்ளிரவில் அரண்மனையை விட்டு வெளியே வருகிறார் புத்தர்; வழிநடந்த களைப்பால் சோர்ந்து மயங்கி வீழ்கிறார் அவர்; அப்போது அங்கே ஓர் இடைச்சிறுவன் வருகிறான். அவனிடம் பால் கறந்து தருமாறு கேட்கிறார் புத்தர். சிறுவனோ தான் தாழ்ந்த குலத்தினன் என்பதால், தன் கலயத்தில் பால் கறந்து அவருக்கு கொடுக்கத் தயங்குகிறான். அப்போது, பிறப்பில் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது! என்று புத்தர் அவனுக்குப் "பின்னி

போதிக்கிறார். நெஞ்சைத் தொடும் இந்த இடத்தைக் கவிமணி தமிழில் எங்ஙனம் சுவைபடப் புனைந்துள்ளார் எனக் காண்போம்.

"ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவ துண்டோ அப்பா?

எவர் உடம்பினிலும் – சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழி நீர்க்கும் – உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா! ...

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டும் அப்பா!"

'ஆசிய ஜோதி' யில் வரும் பிறிதோர் இடமும் இங்கே நினைவு – கூரத்தக்கதாகும். புத்தரிடம் பாம்பு தீண்டி இறந்த தன் குழந்தையை எடுத்துவந்து உயிர் பெற்றுத் தரவேண்டும் என்று உருகிக் கேட்கும் ஓர் அன்புத் தாயைப் 'புத்தரும் மகனிழந்த தாயும் என்னும் பகுதியில் சந்திக்கிறோம். சந்திரமதி போல் நின்ற தையல் என நம் மண்ணின் மரபிற்கு ஏற்ப அவளைச் சுட்டும் கவிமணி, தொடர்ந்து அவளது துயர உணர்ச்சியை மிக நெகிழ்வான பாடல்களாகப் புனைந்துள்ளார்:

"வாய்முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தைதடு மாறுதையா!

முகம்பார்த்துப் பேசாமல்
முலைப்பாலும் உண்ணாமல்
மகன்கிடக்கும் கிடைகண்டு
மனம்பொறுக்கு தில்லைஐயா!"...

'பின்னி முடிச்சிடம்மா
பிச்சிப்பூச் சூட்டிடம்மா
என்னும் மொழிகளினி
எக்காலம் கேட்பனையா?

நெஞ்சிற் கவலையெல்லாம்
நிற்காமல் ஓட்டும் அந்தப்
புஞ்சிரிப்பைக் காணாது
புத்திதடு மாறுதையா! -

தாயாகி உள்ளம்
தருக்கி யிருந்தது போய்ப்
பேயாகி இன்று
பிணந்தூக்கி நிற்பேனோ?"

என்றாற்போல் கவிமணி இயற்றியுள்ள பாடல்களின் நடை, மகனை இழந்த தாயின் துயர உணர்ச்சியை நேரே எடுத்துரைக்கும் திறம் பெற்றதாகும்.

மூலத்தை வெல்லும் மொழிபெயர்ப்பு என்று பயில்வோர் நெஞ்சாரப் பாராட்டிப் போற்றும் வண்ணம் அமைந்த இத்தகைய ஆசிய ஜோதிப் பாடல்களைக் குறித்துப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தமது தமிழின் மறுமலர்ச்சி என்ற நூலில் கூறும் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கதாகும்.

"புத்தர் பிரானது சரித்திரப் பகுதிகளிற் சிலவற்றை அதியற்புதமான தமிழில் கவிமணி பாடியுள்ளார். இப் பகுதிகளை நாம் படித்து நோக்கினால், கவிமணி எவ்வளவு அழகாக இச் சரிதத்தில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரியும். ஆசிரியரது ஆழ்ந்த உணர்ச்சியும், தமிழின் குழைவும், கவிதையின் அருமைப்பாடும் படிப்போரது உள்ளத்தைக் கனிவிப்பனவாகும். இப்பாடல்கள் பெயரளவில்தான் மொழிபெயர்ப்பு. இவற்றை ஒரு நூதன சிருஷ்டி என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்."

உமார்கய்யாம் எடுத்துள்ள அற்புதமான மறுபிறவி

கவிமணியின் மொழிபெயர்ப்பு வண்ணமும் வனப்பும் வெளிப்படும் பிறிதொரு படைப்பு உமார்கய்யாம் பாடல்கள்.

உமார்கய்யாம் பாரசீக நாட்டில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருங்கவிஞர். கவிதையில் மட்டுமின்றி, பீஜ கணிதம், சோதிடம் ஆகியவற்றிலும் பெருந்திறமை படைத்தவராக விளங்கியவர் உமார்கய்யாம். உமார்கய்யாம் பாடல்களை எட்வர்டு பிட்ஸ்ஜெரால்டு என்பார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவற்றைப் பின்பற்றிக் கவிமணி தமிழில் 115 விருத்தப் பாக்களாகப் புனைந்துள்ளார். பிட்ஸ்ஜெரால்டு வாயிலாக உமார்கய்யாம் பாடல்களைக் கவிமணி மொழிபெயர்க்க முற்பட்டதை நமது பாக்கியம் என்றே கூறவேண்டும். தமது மொழிபெயர்ப்பின் வாயிலாக தமிழ்நாட்டில் உமார்கய்யாம் என்ற கவிஞரின் பெயர் என்றும் மங்காது மறையாது ஒளிவீசித் திகழும்படி செய்துவிட்டார் நமது கவிமணி. சுருங்கச் சொன்னால், கவிமணி மூலமாக நமது நாட்டில் உமார்கய்யாம் ஓர் அற்புதமான மறுபிறவியை எடுத்துள்ளார் எனலாம்.

கவிமணி வடித்துத் தரும் உமார்கய்யாம் பாடல்களிலே தமிழ்நாட்டுச் சூழ்நிலையை ஆங்காங்கே காணமுடிகிறது. தமிழ்நாட்டுக் கவிஞர் கம்பர் வருகிறார்; வள்ளல் பாரி குறிக்கப்படுகிறான்; மன்னன் இராஜராஜனின் பெயரும் இடம்பெறுகிறது; எல்லாம் வல்ல ஈசனையும் தரிசனம் செய்ய முடிகிறது. அப்பாடல்களைப் படிக்கும்போது, மொழிபெயர்ப்பு, தழுவல் என்ற எண்ணங்களே தோன்றாமல், தமிழ்நாட்டுக் கவிஞர் ஒருவரின் தலைசிறந்த கவிதைகளைப் பாடி இன்புறுவது போன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படுகிறது. சான்றாக, ஒரு பாடலைக் காண்போம்.

"வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு

தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு
வையந் தருமிவ் வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?"

இப்பாடல் ஆங்கில மூலத்தில் நேரடியான மொழிபெயர்ப்பு அன்று. ஆனால் அதன் கருத்து, தமிழ் மக்களுக்கு ஏற்ற முறையில் கவிமணியால் மாற்றப்பட்டுள்ளது. ஆங்கில மூலத்தின் கருத்தினைப் பொதுப்பட எடுத்துக் கொண்டு, தமிழ்ச் சூழலுக்கு ஏற்றமுறையில், தமிழ்மக்கள் அனுபவிக்கும் முறையில் வேண்டும் மாற்றங்கள் செய்து அழகுற இப்பாடலை இயற்றியுள்ளார் கவிமணி. இங்ஙனம் மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட ஒவ்வொரு பாடலிலும் கவிமணியின் ஆன்மா பிரவேசித்து நின்று, பாடற் கருத்தின் வடிவினைத் தானே மேற்கொண்டு, புதிய படைப்பாகத் தோன்றியுள்ளது என்பதே உண்மை. நமது நாட்டிலே, நமது தாய்மொழி விருட்சத்திலே இயற்கையாய்க் காய்த்துக் கனிந்த கனிகள் என்று சொல்லத்தக்கனவாகவே இப்பாடல்கள் உள்ளன.

"எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்;

தொழுது கெஞ்சி நின்றாலும்,
சூழ்ச்சி பலவும் செய்தாலும்,
வழுவிப் பின்னாய் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ?

அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?

என்னும் புகழ்பெற்ற பாடலும் இவ்வகையில் மனங்கொளத்தக்கதாகும். உமார்கய்யாம் தமிழகத்தில் ஒருவேளை பிறப்பெடுத்துக் கவிதைகள் பாடினால் எவ்வாறு அமையுமோ, அவ்வாறே அமைந்துள்ளன கவிமணியின் இக்கவிதைகள்."

தனிப்பாடல் மொழிபெயர்ப்புகள்

ஆசிய ஜோதி, உமார்கய்யாம் பாடல்கள் என்றாற்போல் முழுநூல்கள் மட்டுமின்றி, ஆங்கிலம், வங்காளம், இந்தி, பிரெஞ்சு, வடமொழி ஆகிய மொழிகளிலிருந்து தனிப்பாடல்கள் சிலவற்றையும் கவிமணி மொழிபெயர்த்துத் தந்துள்ளார். மலரும்

மாலையும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள அத் தழுவற் பாடல்களும் கவிமணியின் கைவண்ணத்தில் புதிய வார்ப்புகளாகவே உருப்பெற்றுள்ளன. சான்றாக, "கிரேயின் கையறுநிலை" என்ற ஆங்கிலப் பாடலைத் தழுவி, அமிழ்ந்துறையும் மணிகள் என்ற தலைப்பில் கவிமணி இயற்றியுள்ள பாடலிலிருந்து ஒரு பகுதியைக் காணலாம்.

"ஆழ்கடலின் கீழ்எவர்க்கும்
அறியமுடி யாமல்
அளவிறந்த ஒளிமணிகள்
அமிழ்ந்துறையும், அம்மா! -

கடல்சூழ்ந்த உலகுபுகழ்
காவியம்செய் யாமல்
கண்மூடும் கம்பருக்கோர்
கணக்கில்லை, அம்மா!

இடமகன்ற போர்முனைதான்
ஈதென்னக் காணாது
இறக்கின்ற வில்விசயர்
எத்தனைபேர், அம்மா!

தக்க திறனிருந்தும் – நல்ல
தருணம் வாய்த்திலதேல்,
மிக்க புகழெய்தி – மக்கள்
மேன்மை அடையாரம்மா!

மொழியாக்கப் பாடல்கள்

தமிழ் மணம் கமழ, புத்தம் புதிய படைப்பாகக் கவிமணி தந்திருக்கும் இத்தகு மொழிபெயர்ப்புப் பாடல்களை, மொழிபெயர்ப்பு என்றோ, தழுவல் என்றோ கூறாது, மொழியாக்கப் பாடல்கள் என்று சுட்டுவதே பல்லாற்றானும் பொருந்துவதாகும்.

சித்தியாகும் உத்திகள்

– பேரறிஞர் **கதிர். மகாதேவன்**

நான் நினைத்தேன்! நீ சொன்னாய்!

நாம் நினைப்பதைச் சாதிப்பதற்கோ, சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதற்கோ, நோக்கங்களில் வெற்றி பெறுவதற்கோ இத்தகைய தொடர்பியல் உத்திகள் கைவந்த கலையாகப் பயன்படுகின்றன. செயல் நோக்கம் வெற்றி பெறவேண்டுமானால், அந்த நோக்கம் யாருக்குத் தெரிவிக்கப் பாடல் வேண்டுமோ அவரிடம் முழுமையாகப் போய்ச் சேர்தல் நன்று!. நான் என்ன நினைத்தேனோ அதையே சொல்லிவிட்டீர்களே! என்று யாரேனும் உங்களிடம் கூறினால், உங்கள் வெற்றிப் பாதையில் அவரை அழைத்துச் செல்கிறீர்கள் என்று பொருளாகும்.

மொழியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் நீங்கள் நினைத்ததை அடைவதற்கு மொழி ஒரு நல்ல கருவியாகும் என்பதையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

என்ன சொல்கிறாய்? எப்படிச் சொல்கிறாய்?

வெற்றி உன்னை நோக்கி வரவேண்டுமானால், உனக்கு வேண்டியதைச் சொல்கிறாய்! உனக்கு வேண்டியதை நோக்கிச் செயல்படுகிறாய்! ஆனால், வெற்றி தோல்விகள் நீ என்ன சொல்கிறாய்? நீ என்ன செய்கிறாய்? என்பதைப் பொறுத்து அமைவதில்லை! அதற்கு மாறாக நீ எப்படிச் சொல்கிறாய் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

நாம் சிலவற்றைப் பிறரிடமிருந்து எதிர் பார்க்கிறோம்; அவர்கள் தாமே முன்னின்று அச்செயல்களைச் செய்யவேண்டும் என்று எண்ணுகிறோம்; இதற்காக நம் நேரத்தைச் செலவிடுகிறோம்; இவை தலைமைத் தன்மை பெற்றவர்களின் எதிர்பார்ப்புகள் ஆகும்.

இகல் வெலல் யார்க்கும் அரிது...

தொடர்பியலில் இன்றியமையாதது சொல்வன்மை ஆகும்.

சொல்லும்போது கேட்பவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளும், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும். இதனை,

> "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்பார் வள்ளுவர்.

தலைவர் என்றால் ஏதோ அரசியல் தலைவருக்குத்தாம் பொருந்தும் என்று நினைத்தல் கூடாது. தொடர்பியலின் திறத்தால்தான் ஒருவர் சொன்னபடி பிறர் கேட்கவேண்டும். பெற்றோர், தம்பதிகள், குழுவினர், உடன் பணிபுரிவோர், நண்பர்கள் எனவரும் எத்திறத்தவராயினும், ஒருவர் விரும்புவதை மற்றவர் விரும்பி ஏற்றுச் செய்வார்களானால், அது தலைமைத் தன்மைக்குரிய பண்பினைச் சுட்டுகிறது எனலாம்.

தலைமைப் பதவியில் இருப்பவர் தன்னிடம் பணிபுரிவோரைச் சட்டப்படி கட்டாயப் படுத்துவர்; கையொப்பமிட்டு ஆணை பிறப்பிப்பர். இது சிலகாலம் பயன் தரலாம்: ஆனால் பெரிதும் வெறுப்பினை ஈட்டும்; பெரும்பாலும் எதிர்ப்பினை உண்டுபண்ணும்; நம் முயற்சிகளுக்குக் கேடு விளைவிக்கும்.

வெற்றிக்கு வழிவகுக்கும் தொடர்பியல் உத்திகள்

உண்மையான தலைவர்கள் தம் எண்ணத்தைப் பிறர் ஏற்றுப் போற்றிப் பணி செய்யுமாறு செய்வர். இது தொடர்பியலில் கொண்டுள்ள சரியான உத்தியைக் காட்டுகிறது.

தொடர்பியல் திறம் என்பது தொடர்ந்து காணப்படும் போக்காகும்; ஒருவர்தம் உரையாடலில் நின்று நிலைக்க வேண்டிய பண்பாகும்; சூழலுக்கு ஏற்ப மாறுதலைத் தரக் கூடியதும் ஆகும்.

ஒரு குறிப்பிட்ட சூழலை நீங்கள் கற்பனை செய்கிறீர்கள். அச்சூழலுக்கு ஏற்ப உருக்காட்சிகள் உங்கள் உள்ளத்துள் உருவாகவேண்டும். உங்கள் மனக்கண்முன் அவை பிம்பங்களாகத் தோன்றவேண்டும். அதற்கேற்றாற் போல மொழித் தொடர்பினைத் திட்டமிடல் நன்று. உங்கள் அறிவு மொழித் தொடர்பினைத் தேர்ந்து தெளியும். உங்கள் அனுபவம்,

பட்டறிவு ஆகியவை தொடர்பியலுக்கு உகந்த சொற்களையும் படிமங்களையும் உருவாக்கும். இவை மொழித்திறனை உருவாக்கும் வழிகளாகும்.

ஒன்று நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள் ! நீங்கள் கூறுகிற செய்திக்கு ஏற்ப ஒருவர் செயல்படப்போவதில்லை! நீங்கள் அச்செய்தியை எப்படிக் கூறப்போகிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் பிறர் செயல்பாடுகள் அமையும்.

தொடர்பியலில் செய்திகள் கேட்போர்தம் கண்ணையும் கருத்தையும் கவருவதாக அமைதல் நன்று. கேட்போர் அச்செய்தியினை நீங்கள் நினைத்தவாறு ஏற்கிறார்களா என்பது ஆய்வுக்குரியது. நீங்கள் எண்ணிய எண்ணப்படியே அதனைப் பிறர் ஏற்பார்கள் என்றால், தொடர்பியலில் வெற்றிபெற்றவர் எனலாம். கேட்போர் தத்தம் ஆற்றலுக்கும் பட்டறிவிற்கும் ஏற்றவாறு அச்செய்தியினை மாற்றுவர் என்பதை அறிதல் வேண்டும்.

நேரிடையாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லும் உத்திக்கு ஆற்றல் அதிகம். படர்க்கையில் சொல்லாமல் முன்னிலையில் உரைத்தல் நன்று. தொடர்பியல் இல்லை என்றால் தலைமைத் தன்மை இல்லையாம். இவை அனைத்தும் நால்வகைத் திறத்தாலும் சூழலாலும் வரையறுக்கப்படுகின்றன.

அவையாவன:

1. சூழல் (அ) திணை: இந்தத் தொடர்பியல் நோக்கு எந்தச் சூழலில், எந்தக் காரணத்திற்காக நடைபெறுகிறது.
2. இயங்கு நிறை ஆற்றல் : தொடர்பியலில், காலம் அறிதல் இன்றியமையாதது; ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய கருவிகளுடன் ஏற்ற காலத்தை அறிந்து செய்தல் வேண்டும்.
3. உளவியல் பாங்கு: ஒவ்வொரு குறிப்பிட்ட நேரத்தில் தொடர்பியலை ஏற்கும் பாங்கு.
4. பங்குகொள்ளும் செயல்திறன்:

தொடர்பியலால் எந்த அளவிற்கு உங்கள் செயலிலும் கருத்திலும் பிறர் ஈடுபடுமாறு செய்து வெற்றி அடைகிறீர்கள்

என்பதைக் கணிக்கவேண்டும். சுருங்கச் சொன்னால், தொடர்பியல் என்பது சிக்கல் நிரம்பிய – ஆனால் – பல்திறக் கட்டொருமைப் பாட்டை நிலைநாட்டும் நடைமுறை ஆகும்.

தொடர்பியலில், ஒரு சொல் எத்தகைய எண்ணங்களை ஒவ்வொருவர் மனத்திலும் உருவாக்குகின்றது என்பது பார்க்கத்தகும்.

நான் கூறப்போகும் இந்தச் சொல்லில் உங்கள் சிந்தையைச் செலுத்த வேண்டும். இந்தச் சொல்லை ஒரு தாளில் எழுத வேண்டா. ஆனால், அந்தச் சொல் உங்கள் சிந்தனையில் என்ன என்ன எண்ணங்களை விளைவித்தன என்று எழுதுதல் வேண்டும். அந்தச் சொல் 'நாய்' என்றால் நாய்தான்! அதைத்தான் நான் நினைக்கின்றேன் என்று கூறுபவர் சராசரி மனிதரல்லர்! சற்று வேறானவர்! கற்பனை வறண்டவர் எனலாம். நாய் என்றவுடன், பூனை என்று கூறவில்லை என்றாலும் உங்கள் நாயின் பெயரைச் சொல்லலாம். அதனுடன் நீங்கள் பெற்ற அனுபவம் உங்கள் உள்ளத்தில் ஊசலாடவும். சிலருக்கு நாய் என்றவுடன், கடிநாய் நினைவிற்கு வரும்: குரைக்கும்போது தெரிக்கும் எச்சரிக்கை; கல் தேடும் கண்கள் என சிலருக்குக் கற்பனை தோன்றும்; சிலர்க்கு நாய் வால் குழைத்து வரவேற்கும் உரசல்கள், அன்பு, நன்றி இவை தோன்றும்.

தனிப்பட்டவரின் அனுபவத்திற்கு ஏற்றவாறு 'நாய்' என்ற சொல்லிற்குப் பொருள் வருவதைக் காணலாம். இந்தச் சொல்லிற்கே இத்துணைப்பொருள் வருகிறது என்றால், அவளிடமோ அவனிடமோ கொண்ட கருத்து வேறுபாட்டை எவ்வாறு கூறிச் சரி செய்வது?

நீங்கள் ஒரு செய்தியைப் பிறிதொருவருக்குச் சொல்லும்போது ஒருபோதும் நீங்கள் நினைப்பதுபோல ஒரே மாதிரியாகச் சென்றடைவதில்லை! ஒவ்வொருவருக்கும் தொடர்பியலில் ஒவ்வொரு மாதிரியான தொடர்பிருக்கும்.

ஒரு நிகழ்ச்சியைக் காண்போம், இஃது உண்மையான நிகழ்ச்சியாகும்; ஒரு பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்ததாகும். ஓதலும் ஓதுவித்தலும் பயிற்றலும் பயிற்றுவித்தலும் ஒன்றின் ஒன்று தொடர்புடையனவாகும். பெரிதும் ஒரு பல்கலைக் கழகத்தில் பயின்றவரைப் பணியில் அமர்த்துகிறோம்.

உன்னத உடல் நலம் உயர்வான வாழ்வு தரும்

உடல் நலப் பரிசோதனை திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உள்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம்: மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை.

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை-625 107. போன்:536361-68
Fax: 536353 E-mail: mmhrc @ md2.vsnl.net.in

அன்பு அச்சகம். மதுரை–1 ✆ 741116